**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.121/2019**

**வா.சா. –3–விஜயசங்கர்**

**நாள். 04.02.2025**

**வா.சா.3 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் சாட்சி சொல்ல எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வழக்கின் 2 ஆம் வாதி சௌமியா அழைத்ததன் பேரில் நான் சாட்சி சொல்ல வந்தேன். 1 ஆம் வாதி தினகரன் எனது உறவினர் என்றால் இல்லை பழக்கமானவர். அவர் சுமார் 8,9 வருடங்களாக பழக்கம். அவர் எனது கம்பெனிக்கு வேலைக்கு வந்தார். நான் வடமதுரையில் ஓர்க் சாப் வைத்து நடத்தி வருகிறேன். 1 ஆம் வாதி தினகரன் அவரது வாகனத்தை வேலை பார்ப்பதற்காக எனது ஓர்க் சாப்பிற்கு வந்த போது எனக்கு பழக்கம். அவரின் பூர்வீகம் கரூர் மாவட்டம், கடவூர் தாலுகா, கோட்டக்கரை ஆகும். அவர் இறக்கும் போது வடமதுரையில் வசித்து வந்தார் என்றால் இல்லை, வேலைக்கு வந்த இடத்தில் இறந்துவிட்டார். மேற்படி தினகரன் பூர்வீக ஊரில் நிறை கடன் பெற்று அதனை அடைக்க முடியாமல் தான் வேலைக்கு வந்தார் என்றால் இல்லை. அவர் பூர்வீக ஊரில் அவர் கடன் பெற்றுள்ள விபரம் எனக்கு தெரியாது. 2016 நவம்பரில் மத்திய அரசு பண மதிப்பிழப்பு செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியும். 2017 ஜனவரியில் இருந்து புதிய நோட்டு வழக்கத்தில் வந்தது என்றால் சரிதான். 15.02.2017 அன்று தினகரன் ரூ.20,00,000/– கடன் கொடுத்தார் என்றால் வங்கியில் இருந்து தான் பணம் எடுத்து கொடுத்திருப்பாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு கடன் கொடுத்த ரூ.20,00,000/– நான் பார்க்கவில்லை என்றால் பையில் வைத்து கொடுத்தார். மேற்படி பணத்தை நான் சரிபார்த்தேனா என்றால் இல்லை, அவர் சரிபார்த்தார். எனக்கு புரோநோட்டு எழுதும் பழக்கம் உண்டா என்றால் நான் சென்றேன், எழுதத் தெரியுமா என்று கேட்டார்கள் தெரியும் என்று சொன்னேன், எழுதச் சொன்னார்கள் எழுதிக்கொடுத்தேன். நான் புரோநோட்டு எழுதிய சமயத்தில் யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் தினகரன், நான், மணிமாலா மற்றும் அவருடன் வந்த நபர், மற்றும் அர்ஜூனன் ஆகியோர் இருந்தோம். மணிமாலாவுடன் வந்த நபர் பெயர் சிதம்பரம் என்று சொன்னார்கள் அவரின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. மேற்படி அர்ஜூனன் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. மேற்படி அர்ஜூனன் தினகரனுக்கு தான் பழக்கம். மேற்படி அர்ஜூனன் ராஜலெட்சுமி என்பவரின் சம்பந்தி என்றால் எனக்கு தெரியாது. மணிமாலா ரூ.20,00,000/– கடன் மற்றும் தொழில் சம்பந்தமாக கடன் பெற்றார். நான் சொன்னது போல் 15.02.2017 அன்று மணிமாலா தினகரனிடம் எந்த கடனும் வாங்கவில்லை, மணிமாலா தினகரனுக்கு எந்த புரோநோட்டும்

**எழுதிக்கொடுக்கவில்லை என்றும், வடமதுரையை சேர்ந்த ராஜலெட்சுமி என்பவர் தான் என்னையும், தினகரனையும் வைத்து மோசடியாக தாவா புரோநோட்டை உற்பத்தி செய்தார்கள் என்றால் சரியல்ல. எனவே, வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.02.04 18:13:46 +0530

Additional District Judge(FAC),

Dindigul.